## தொல்பொருளியல் பட்டபின்படிப்பு நிறுவகம் - 2017

களணிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தொல்பொருளியல் பட்டபின்படிப்பு நிறுவகச் சட்டவாகத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப விதியின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தை 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக்ங்கள் அதிகாரச் சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 4 வகைச் சொத்துக்களது கிரயம் மற்றும் சுவீகரிப்புகளது பெறுமதி முறையே ரூபா 50,137,844 மற்றும் ரூபா 1,245,002 என்பனவாகும். எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதியானது முறையே ரூபா 51,361,231 மற்றும் ரூபா 1,292,307 எனக் காட்டப்பட்டதால் ரூபா 1,223,387 மற்றும் ரூபா 47,305 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பிரசுரக் கையிருப்புகளது பெறுமதி ரூபா 1,350,697 ஆகியபோதும், நிறுவகத்தின் புத்தகங்களுக்கமைய அப் பெறுமதி ரூபா 931,372 ஆகியமையால் ரூபா 419,325 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காணப்படும் செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட 5 முற்பண மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,876,489 ஆகும். இது அநேக ஆண்டுகளாகத் தீர்த்து வைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது.

(ஆ) நிறுவகத்தில் பணியாற்றிய விரிவுரையாளர் ஒருவர் 2014 ஒக்டோபர் 19 ஆந் திகதியன்று சேவையிலிருந்து விலகியிருந்தார். அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர்க் கடன் மீதியாகிய ரூபா 208,636 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் ஏனைய பொறுப்புகளின் கீழ் காணப்படும் நிறைவடைந்து 4 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள 2 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களது ரூபா 215,517 கூட்டுத் தொகையைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது அதனை வருமானத்திலிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 2,893,052 பற்றாக்குறையாகியதுடன், அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,761,480 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 868,428 குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மீண்டுவரும் மானியம் ரூபா 4,879,000 அதிகரித்ததும் ஆண்டிற்கான செலவினம் ரூபா 1,838,539 குறைவடைந்ததும் நிதிப்பெறுபேற்றில் அதிகரிப்பு ஏற்பட விசேட காரணிகளாகின.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,823,191 மற்றும் ரூபா 6,412,197 எனப் பற்றாக்குறை நிலவியபோதும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,059,619 மிகை ஏற்பட்டிருந்தது. மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் முறையே ரூபா 3,761,480 மற்றும் ரூபா 2,893,052 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தபோதும், நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களுக்கான ஊதியத்தைச் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 26,278,680 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 48,101,134 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01 க்கமையத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காலவரையறை தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அச் செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் குறிப்பிடப்படவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் காலாண்டுப் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

தொல்பொருள் தொடர்பான ஆராய்ச்சிப் பட்டப்படிப்புக் கற்கை மற்றும் தொழில்சார் பயிற்சி என்பன நிறுவகத்தின் சட்டவாக்கத்தில் காணப்படும் பிரதான பணிகளாகும். நிறுவகம் 02 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகளையும் 05 கலைமானிக் கற்கை நெறிகளையும் நடாத்தியதுடன், 04 கல்விசார் ஆண்டுகளின்போது மாணவர்களது பதிவு மற்றும் பரீட்சையில் சித்தியடையும் எண்ணிக்கை என்பவற்றைப் பரிசீலிக்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014, 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளின்போது பதிவு செய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கை முறையே 100, 63, 82, 101 என்பனவாகும். இதற்கமைய, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் மாணாக்கரது பதிவானது குறைவடைந்தபோதும் 2017 ஆம் ஆண்டளவில் மீண்டும் 101 வரை அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) பரீட்சையை நிறைவு செய்த மாணாக்கரது எண்ணிக்கை 2014 முதல் 2017 வரை முறையே 38, 35, 49, 72 என்பனவாகும். 2014 ஆம் ஆண்டில் 38 சதவீதமாகவிருந்த சித்தியடைந்தோர் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டளவில் 71 சதவீதமாக அதிகரித்திருந்தது.

(இ) 2014 முதல் 2017 வரையான காலப்பகுதியின்போது நிறுவகத்தில் பல்வேறு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகளை நிறைவு செய்திருந்த 89 மாணாக்கரின் பொருட்டு 2018 மே 30 ஆந் திகதியளவிலும் பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொல்பொருளியலாளர் ஒருவரால் தொல்பொருள் தொடர்பாக ஆர்வம் கொண்டவர்களுக்குக் காட்சிக்குச் சமர்ப்பிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட தொல்பொருளியல் பெறுமதி மிக்க பெருமளவு பொருட்கள் நிறுவகத்தின் அப்போதைய பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அப்பொருட்கள் ஏறக்குறைய 6 ஆண்டுகளாக அவரது உத்தியோகபூர்வ அறையில் இருந்தன. அப்பொருட்கள் வெகு விரைவில் அருங்காட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பணிப்பாளர் கணக்காய்வுக்குத் தெரிவித்திருந்தார்.

(ஆ) தேவையை இனங்காணாது விற்பனைக்கெனப் புத்தகங்களையும் பிரசுரங்களையும் அச்சிட்டமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,350,697 பெறுமதியுடைய 2,497 புத்தகங்கள் எஞ்சியிருந்தன. ஆண்டின்போது ரூபா 65,169 பெறமதியான 50 புத்தகங்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(இ) நிறுவகத்தின் தற்போதைய வழங்குநரான வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிடமிருந்து புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 63,845 பெறுமதியான வங்கி ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அதற்குரிய புத்தகங்கள் 2018 யூன் 30 வரை நிறுவகத்தை வந்தடையவில்லை. இவ்வழங்குநர் தற்போதும் இம்முற்பணத்தைத் தவிர ஏனைய சகல முற்பணம் தொடர்பான வழங்குதல்களையும் தாமதமின்றி வழங்கியிருந்தார்.

### 4.3 குறைவான நிதியப் பயன்பாடு

மூலதனச் சொத்துக்களைத் திருத்தியமைப்பதற்கும் கல்வி கற்பிப்பதற்கான உபகரணங்களுக்குமெனப் பெறப்பட்ட மூலதன நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் செலவழிக்கப்படாத ரூபா 2,935,820 மூலதன மானிய மீதி இருந்ததுடன், ஆண்டின் ஆரம்பத்தில் போதியளவு பணமிருந்தபோதும் மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 மூலதன மானியமாகப் பெறப்பட்டிருந்தது. இதற்கமைய, ஆண்டிற்கான மூலதன மானியச் செலவினம் ரூபா 879,661 ஆகியமையால் ஆண்டின் இறுதியில் மூலதன மானியத்தில் ரூபா 2,556,159 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிறுவகத்தின் 2 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் முறையே ரூபா 4,564,755 மற்றும் ரூபா 5,338,930 என்பனவாகும். இவ்விரண்டு கணக்குகளிலும் ஆண்டின்போது முறையே ரூபா 6,065,743 மற்றும் ரூபா 6,292,205 சராசரி மீதிகள் நிலவியமையால் நடைமுறைக் கணக்குகளில் பயன்படுத்தப்படாத மீதி இருப்பது அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' என்பவற்றின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு தொல்பொருளியில் பட்டப்பின் படிப்பு நிறுவகம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் உள்ளவாறான பெறுமதிகளுக்கும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட பெறுமதிகளுக்குமிடையே 40 முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டமானது வெற்றிகரமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | பயன்படுத்தப்பட முடியாத சொத்துக்களைக் கைதவிர்ப்புச் செய்வது தாமதமாவது மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதியப் பயன்பாடு | நிதியத்தைச் சிறப்பாக பயன்படுத்துவதன் மூலம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைய நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | மாணாக்கரை ஆட்சேர்த்தல் | ஆண்டுதோறும் குறைந்தவாறிருக்கும் மாணாக்கர்களது பதிவை அதிகரிக்கச் செயவதற்கு திட்டமிடாமை. |